# <u>கரூர் மாநகராட்சி</u>

## 2026ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 12.00 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கில் அவசரக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.

### <u>பொருள்கள்</u>

**1)**கரூர் மாநகராட்சி மண்டலம்–1 வார்டு எண்.11 பாலம்மாள்புரம் கழிவுநீர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 150 எச்.பி மோட்டாரின் Starter Box பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளது. அதனால் கழிவுநீர் மோட்டார் இயக்க முடியாமல் கழிவுநீர் தேங்கும் நிலை உள்ளது.

எனவே, மண்டலம்–1 வார்டு எண்.11 பாலம்மாள்புரம் கழிவுநீர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 150 எச்.பி. மோட்டாரின் Starter Box ஐ சரி செய்யும் பணிக்கு தாயர் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00/–இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை மாநகராட்சி புதைவடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/2026)**

**தீர்மான எண்.3351 அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

**2)**கரூர் மாநகராட்சிக்கு உட்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் G.O.MS. No: 730, date: 30.12.2000 படி Rs 33.12 கோடி மதிப்பீட்டு திட்டத்தில் 15 MLD கொள்ளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அரசு காலணி பகுதியில் கட்டப்பட்டு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 30.04.2012 அன்று மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து வரும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரின் தரத்தை கண்காணிக்க கண்காணிப்பு அமைப்பானது (Online Continuous Effluent Monitoring System) OCEMS நிறுவப்பட்டது. இந்த அமைப்பை அதற்கு பின் தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியம் கண்காணித்து கொண்டிருந்தது. தற்போது OCEMS நிறுவப்பட்டு 5 வருடங்கள் ஆன நிலையில் தற்போது பழுதுதடைந்து கழிவு நீரின் தரம் கண்காணிக்க முடியவில்லை அதனால் தற்பொழுது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள OCEMS சரி செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வர மதிப்பீட்டு தொகை ரூ.36.35/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை மாநகராட்சி புதைவடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்

3. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ5/2026)**

**தீர்மான எண்.3352 அலுவலகுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

3)அரசாணை எண்.21 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை நாள்.04.02.2026ல் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் KFW உதவியுடன் SMIF-TN-III–2ன் கீழ் ரூ.245.07/– கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளது.

மேற்படி குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தும் பணிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (OHT) மற்றும் நிலத்தடி நீர்த்தேக்கத் தொட்டி (SUMP) கட்டும் இடத்தில் 43 மரங்கள் இடையூறாக உள்ளதனை அகற்றுவதற்கு அனுமதி வழங்க கோரி வருவாய் கோட்டாச்சியர் மற்றும் மாவட்ட வனத்துறை அலுவலர் அவர்களுக்கு கடிதம் வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேற்படி 43 மரத்தினை அகற்றுவதற்கு ஈடாக 1:10 விகிதத்தில் ஒரு மரத்திற்கு ரூ.3,770/– என 430 மரங்கள் நட்டு பராமரிப்பதற்கான செலவு தொகையினை ரூ.16,21,100/– மாவட்ட பசுமைக்குழு கணக்கில் செலுத்தப்பட்ட பின்பு மரங்களை அகற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் KFW உதவியுடன் SMIF-TN-III–2ன் கீழ் ரூ.245.07/– கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தும் பணிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (OHT) மற்றும் நிலத்தடி நீர்த்தேக்கத் தொட்டி (SUMP) கட்டும் இடத்தில் இடையூறாக உள்ள 43 மரத்தினை அகற்றுவதற்கு ஈடாக 1:10 விகிதத்தில் ஒரு மரத்திற்கு ரூ.3,770/– என 430 மரங்கள் நட்டு பராமரிப்பதற்கான செலவு தொகை ரூ.16,21,100/–ஐ மாவட்ட பசுமைக்குழு கணக்கில் செலுத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணி திட்டப் பணியாக உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ2/6052/2025)**

**தீர்மான எண்.3353 அலுவலகுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

4)கரூர் மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்.36, 37 மற்றும் 43 முதல் 48 வரையுள்ள பகுதிகளுக்கு கட்டளை பகுதிகளிலுள்ள (KFW புதிய குடிநீர் திட்டம்) தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்யப்படும் 11 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் வால்வுகளை இயக்குதல் மற்றும் குடிநீர் விநியோக பணிகளை மேற்கொள்ள செப்டம்பர் 01/2026 முதல் ஜூன் 30/2027 வரை 303 நாட்களுக்கு வெளிக்கொணர்வு முகமை (Out sourcing) மூலம் பணி மேற்கொள்ள 24.08.2026 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.49.50 இலட்சம்</u>

1. M/s. Vishwa Infrastructures, Kanniyakumari
2. M/s. PRG Construction, Karur
3. M/s. Vescon Infrastructure Pvt. Ltd, Chennai

மேற்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட கூடுதல் ஆவணங்கள் (Additional Documents) E-Tender Website –ல் 28.08.2026 ஆம் தேதியன்று சமர்ப்பிக்க கோரி தெரிவிக்கப்பட்டது.

1. **M/s. Vishwa Infrastructures, Kanniyakumari :**
   - O & M related to water supply work as a single agreement for 100% work value - document
   - Annual minimum Financial Turnover for 100% work value documents
   - Proof for having working capital sufficient for 100% work value.
2. **M/s. PRG Construction :**
   - Similar work related document (O & M related to water supply system) should be given.
3. **M/s. Vescon Infrastructure Pvt. Ltd :**
   - MSME registration certificate should be attached
   - Annual minimum Financial Turnover for 100% work value documents

மேற்படி கூடுதல் ஆவணங்கள் சமர்ப்பிக்க கோரப்பட்டதில் வரிசை எண்.1 மற்றும் 3ல் உள்ள M/s. Vishwa Infrastructures, Kanniyakumari மற்றும் M/s. Vescon Infrastructure Pvt. Ltd, Chennai ஒப்பந்ததாரர்கள் தேவையான கூடுதல் ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார்கள். மேலும், வரிசை எண்.2ல் உள்ள ஒப்பதந்ததாரர் M/s. PRG Construction அவர்கள் Similar work தொடர்பான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால் அவரின் ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்யப்பட்டது.

மேற்படி பணிக்கு 03.09.2026 ஆம் தேதியன்று Price Bid திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகிதத்தினை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.49.50 லட்சம்**

1. M/s. Vescon Infrastructure Pvt. Ltd, Chennai மதிப்பீட்டைவிட –12.52% சதம் குறைவு
2. M/s. Vishwa Infrastructures, Kanniyakumari மதிப்பீட்டைவிட – 9.90 % சதம் குறைவு

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S Vescon Infrastructure Pvt Ltd, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மற்றும் ஒப்பந்த விதிகளின் படி 4 சதவீதம் ஒப்பந்த மதிப்பில் கூடுதல் வைப்புத்தொகை செலுத்தும் பட்சத்தில் பணி உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/3216/2026)**

**தீர்மான எண்.3354 அலுவலககுறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது**

5)கரூர் மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்.36, 37, 43, 44, 45, 46, 47 மற்றும் 48 ஆகிய வார்டு பகுதிகளில் ஆழ்துளை கிணறுகளின் மினிபவர் பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பணிக்கு அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று 18.09.2026ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ25.00லட்சம்**

1. M/S.Malliga Engineering Contractors, Karur மதிப்பீட்டை விட –15.16% சதவீதம் குறைவு

2. M/S. PRG Construction, Karur மதிப்பீட்டை விட –14.86% சதவீதம் குறைவு

அலுவலக குறிப்பு:

1. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.Malliga Engineering Contractors, Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மற்றும் ஒப்பந்த விதிகளின் படி 5 சதவீதம் ஒப்பந்த மதிப்பில் கூடுதல் வைப்புத் தொகை செலுத்தும் பட்சத்தில் பணி உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியத்திற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ2/3762/20260)**

**தீர்மான எண்.3355 அலுவலககுறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**6)**கரூர் மாநகராட்சிப் பகுதிகளில் பாதசாரிகள் மற்றும் பள்ளி மாணவர்களின் பாதுகாப்பை மேம்படுத்தவும், சாலைகள் மற்றும் முக்கிய சந்திப்புகளை பாதுகாப்பான மற்றும் அனைவருக்கும் பயன்படும் வகையில் மேம்படுத்தவும், நகரின் அதிக வாகனங்கள் வந்து செல்லும் பகுதியாகவும் மற்றும் பாதசாரி கடைகள் ஆக்கிரமித்து பள்ளி மாணவ, மாணவிகள் சென்று வருவதற்கு மிகவும் சிரமாமகவும் உள்ள வார்டு எண்.32ல் அமைந்துள்ள பள்ளி (கோட்டைமேடு உயர்நிலைப்பள்ளி) மற்றும் அதிகமான வணிக கடைகள், தீயணைப்புத் துறை, தாலுகா அலுவலகம் மற்றும் நகரின் முக்கிய வணிக தலமாக அமைந்துள்ள ஜவஹர் பஜார் தெருவும் தேர்ந்தெடுத்து இப்பகுதியினை தள ஆய்வு, Traffic/Pedestrian Survey, Concept & Detailed Design, Drawings, BOQ, Cost Estimate, Technical Specifications மற்றும் முழுமையான DPR ஆகியவற்றை தயாரிக்க தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த Consultant–ன் தொழில்நுட்ப உதவி தேவைப்படுகிறது.

எனவே, தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த Consultant–ஐ தேர்வு செய்து DPR தயாரிக்கும் பணியினை மேற்கொள்ள School Safe Access - அதிகபட்சமாக ரூ.2.50/– மற்றும் Pedestrian Friendly Street Projects –அதிகபட்சமாக ரூ.2.50/– மொத்தமாக ரூ.5.00/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோருவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/4512/2026)**

**தீர்மான எண்.3356 அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

**7)** கரூர் மாநகராட்சி மண்டலம்–3 வார்டு எண்.38ல் உள்ள காந்திகிராமம் நடுநிலைப்பள்ளியில் RCC மேற்கூரை பூச்சு வேலை செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.1.55/– இலட்சத்திற்கு கல்வி நிதியில் மேற்கொள்வதற்கு பதிலாக தவறுதலாக பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மாமன்ற அவசர கூட்ட தீர்மான எண்.2993, நாள்.17.02.2026ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பள்ளியில் RCC மேற்கூரை பூச்சு வேலை செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.55/– இலட்சத்தினை மாநகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதிக்கலாம் (இ1/330/2026)

**தீர்மான எண்.3357 அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

8)கரூர் மாநகராட்சியானது 2011 மக்கள் தொகை கணக்கின்படி 2,14,412 நபர்கள் கொண்ட மாநகராட்சியாகும், கரூர் மாநகராட்சியானது கரூர், இனாம் கரூர், தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி பகுதிகளை உள்ளடக்கியதாகும். கரூர் மற்றும் இனாம் கரூர் பகுதியில் பாதாள சாக்கடை திட்டமானது 30.04.2012 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி திட்டமானது 3013 மனித ஆய்வுக்குழிகள் 88.90 கி.மீ பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் 2.77 கி.மீ கழிவு நீரேற்று நிலைய குழாய்கள் மற்றும் ஒரு பிரதான கழிவு நீரேற்று நிலையம் மற்றும் இரண்டு கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் 15.00 MLD கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. மேற்படி திட்டத்தில் 15000 கழிவு நீர் வீட்டிணைப்புகள் திட்ட அறிக்கையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் செயல்படுத்தும் போது அவ்வவ்போது ஏற்படும் அடைப்புகளை நீக்குவதற்கு சுத்திகரிப்பு நிலையங்கள், கழிவு நீருந்து நிலையங்கள் இயக்குவதற்கு மாநகராட்சி பணியாளர் இல்லாத காரணத்தால் வெளிகொணர்வு முகமை மூலம் (டீரவ ளடிரசஉபைே) பணிகள் வழங்குவது மிகவும் அவசியமாகிறது. மேலும் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.23656/2013/டிஒ, நாள்.04.02.2016ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ளார். அதன் வரன்முறையில் தற்போது மாநகராட்சி நிதி நிலைமையை கருத்தில் கொண்டு குறைந்தபட்சமாக மேற்படி பணிக்கு அத்தியவசியமாக 31 நபர்கள் கீழ்கண்டவாறு தேவைப்படுகிறார்கள்.

| வ.எண் | பணியாளர்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | எலக்டீரிக்கல் மேஸ்திரி | 2 |
| 2 | பிட்டர் கிரேடு –1 | 2 |
| 3 | பம்ப் டிரைவர் | 4 |
| 4 | மேஸ்திரி /பணி ஆய்வர் | 2 |
| 5 | கிளீனர் | 3 |
| 6 | மஸ்டுர் கிரேடு 1 (வாட்ச்மேன்) | 3 |
| 7 | சீவர் லேபர் (ளநறநச டயடிரச) | 13 |
| 8 | டிரைவர் | 2 |
| | **மொத்தம்** | **31** |

மேற்படி பணிக்கு M/s.Tamil Nadu Water Supply and Drainage System வழங்கப்பட்ட ஒப்பந்த காலம் 31.07.2026 அன்றுடன் முடிவுற்றது. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி தங்களின் ஒப்புதல் கடிதத்தினை ஏற்று மேலும் ஒரு மாத காலத்திற்கு (01.08.2026 முதல் 31.08.2026) நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்போது, புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பரிசீலனை செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

எனவே மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Tamil Nadu Water Supply and Drainage System நிறுவனத்திடம் பணியினை மேலும் 1 மாத காலத்திற்கு (01.09.2026 முதல் 30.09.2026) ஏற்கனவே

இப்பணிக்கு வழங்கப்பட்ட விலைவிகித அடிப்படையில் பணி நீட்டிப்பு செய்வதற்கும் அதற்கான செலவினத் தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1)மாமன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்குண்டான தொகை ரூ.8.00 இலட்சம் மாநகராட்சி புதைவடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3)மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிஉத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். **இ5/7143/2025**

**தீர்மான எண்.3358 அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

9)நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.27966/2021/எச்1 மற்றும் தமிழ்நாடு அரசின் அறிவுறுத்தலின்படி துப்புரவு பணியாளர்கள் மேம்பாட்டுத்திட்டம் (SWDS) செயல்படுத்தும் வகையில் நகர்புற மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அனைத்து தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு அடிப்படை தேவைகள் மற்றும் நலத்திட்டங்களை ஒரே இடத்தில் வழங்கிடும் வகையில் உரிமை திட்ட முகாம்கள் நடத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 20.07.2026ம் தேதியில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் நிரந்தரம் மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்தான முகாம் 22.07.2026ம் தேதியன்று வாசவி மஹாலில் நடத்தப்பட்டது இம்முகாமிற்கு தேவையான இன்டர்நெட் இணைப்பு, வாடகை டேபிள், சேர், கம்பியூட்டர் மற்றும் பிரிண்டர் மற்றும் முகாமில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் தண்ணீர், உணவு , தேனீர் மற்றும் ஸ்நாக்ஸ் வழங்ககப்பட்டதற்கும், மேலும் முகாம் நடைபெறுவதை பொதுமக்கள் அறியும் வகையில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான மொத்த செலவின தொகை ரூ.58,740/—ஐ பணியின் அவசரம் அவசியம் கருதி இம்முகாமிற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகள் செய்ய நியமனம் செய்யப்பட்ட துப்புரவு ஆய்வாளர் திரு.ஆ.கோபிநாதன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது

எனவே மேற்கண்ட முகாமிற்கு மேற்கொள்ளப்பட்ட செலவினத்தொகை ரூ.58740/— திரு.ஆ.கோபிநாதன் துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு பொதுநிதியிலிருந்து வழங்க இம்மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மாமன்றம் அனுமதிக்கலாம். **(எச்1/3319/2026)**

**தீர்மான எண்.3359 அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

10) தமிழகம் முழுவதும் மாபெரும் நெகிழி கழிவு சேகரிப்பு மற்றும் சுத்தம் செய்யும் நிகழ்வு 2025ம் ஆண்டு முழுவதும் மாதங்களின் இறுதி சனிக்கிழமைகளில் நடைமுறைப்படுத்த தலைவர் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், சென்னை அவர்களின் கடிதம் எண்.T1/TNPCB/PWM/F014854/Massive collection drive/2024, நாள்.27.12.2024ன் படி கரூர் மாவட்டத்தில் முதன் முதற்கட்டமாக ஜனவரி 2025 முதல் மார்ச் 2025வரை மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.எச்1/2260/2025, நாள்.04.03.2025 ரூ.50000/— தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு மாபெரும் நெகிழி சேகரிப்பு தொடர்பாக பொதுமக்களிடம் கடந்த 24.01.2025, 25.01.2025, 22,02,2025, 29.03.2025

மற்றும் 26.04.2025 ஆகிய தேதிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது இதற்காக பிளக்ஸ் பேனர், மஞ்சப்பை, கையுறை, முகவுறை மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்களுக்கு தேனீர் மற்றும் பிஸ்கட் வழங்கப்பட்டதற்கான மொத்தம் ரூ.48600/– செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசரம்அவசியம் கருதி 500 எண்ணிக்கை மஞ்ப்சபை கொள்முதல் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.8350/–ஐ திரு.இரா.கோபாலகிருஷ்ணன், துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கும் தேனீர், பிஸ்கட் வாங்கி வழங்கியதற்கும் மற்றும் பிளக்ஸ் பேனர் வைக்கப்பட்டதற்கான செலவினம் ரூ.17250/–ஐ திரு.இ.தனபால், துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கும் முகவுரை 500 எண்ணிக்கை மற்றும் கையுறை 500எண்ணிக்கை வாங்கிய வழங்கியதற்கான செலவினம் ரூ.23000/–ஐ திரு.நீ.தேவராஜ், துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கும் வழங்க இம்மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினம் மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களால் விடுவிக்கப்பட்ட தொகையிலிருந்து வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம் **(எச்1/9511/2013)**

**தீர்மான எண்.3360 அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

**11)**கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள உரிம இனங்களை ஒப்படைக்கும் நாள் முதல் ஒன்பது ஆண்டு காலத்திற்கு மாத வாடகை அடிப்படையில் மற்றும் ஒப்படைக்கும் நாள்முதல் மூன்றாண்டு காலத்திற்கு (ஆண்டு குத்தகை இனங்கள்) மட்டுமான ஏலம் 2026–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24–ஆம் தேதி **https://www.mstcecommerce.com** மின்னணு இணைய தளத்தின் வழியாக ஏலம் காலை 11.00 மணி முதல் 4.30 மணி வரை நடைபெற்றது.

**உரிம இனங்கள் விபர அட்டவணை**

| வ. எண் | உரிம இனங்களின் பெயர் | ஏலத்திற்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை (ஏலத்திற்கு தனிதனியாக வைப்புத் தொகை செலுத்த வேண்டும்) ரூ. | கூடுதல் வைப்புத் தொகை ரூ. | ஏலம் உறுதியான பின் செலுத்த வேண்டிய தொகை (ஏலம் முன் வைப்புத் தொகை நீங்கலாக) ரூ. | வருமான வரி மற்றும் சேவை வரி |
|---|---|---|---|---|---|
| 1 | முத்துக் குமாரசாமி பழைய பேருந்து நிலைய வளாகத்தின் தென்புறம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகள் 1 முதல் 48 வரை (5 சதவீதம் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகள்01 மற்றும் 48) | 1,00,000 | 1,00,000 | ஒரு வருட வாடகையினை முன்வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும்.. மின்வைப்புத் தொகைகடை ஒன்றுக்கு தலாரூ. 5000/- | பிரதி மாதம் வாடகையுடன் 18 சதவீதம் சேவை வரி மற்றும் தொழில்வரி தனியாக செலுத்தப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | காமராஜ் சந்தையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தில் புதிதாக கட்டப்பட்ட காய்கறி அங்காடிகள் மொத்தம் 136 மற்றும் மளிகைகடைகள் மொத்தம் 26 | 5,00,000/- | ரொக்கம் ரூ.5,00,000/- | மின் வைப்புத் தொகை 50,000/- மற்றும் துப்புரவு கட்டணம் ரூ.270000/- வருமான வரி 2% மற்றும் சரக்கு மற்றும் சேவை கட்டணவரி 18% | ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டு காலத்திற்கு மட்டும் ஒவ்வொரு வருட முடிவடையும் போது 5% குத்தகை தொகை உயர்வுடன் |
| 3 | முத்துக்குமாரசாமி பேருந்து நிலையத்தில் கையில் தட்டேந்தி பூக்கள் விற்பனை செய்யும் உரிமம். | 4,00,000/- | 4,00,000/- | வருமான வரி 2% மற்றும் சரக்கு மற்றும் சேவை கட்டணவரி 18% | ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டு காலத்திற்கு மட்டும் ஒவ்வொரு வருட முடிவடையும் போது 5% குத்தகை தொகை உயர்வுடன் |
| 5 | முத்துக்குமாரசாமி பேருந்து நிலையத்தில் விளம்பர பலகைகள் (LED Lamp) அமைக்கும் உரிமம் | 1,00,000/- | 1,00,000/- | மின் வைப்புத் தொகை 25000/- மற்றும் வருமான வரி 2% மற்றும் சரக்கு மற்றும் சேவை கட்டணவரி 18% | ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டு காலத்திற்கு மட்டும் ஒவ்வொரு வருட முடிவடையும் போது 5% குத்தகை தொகை உயர்வுடன் |
| 6 | முத்துக்குமாரசாமி பேருந்து நிலைய பிளாட் பாரத்தில் எடை மிஷின் வைத்திட உரிமம் | 25,000/- | 25,000/- | மின் வைப்புத் தொகை 25000/- மற்றும் வருமான வரி 2% மற்றும் சரக்கு மற்றும் சேவை கட்டணவரி 18% | ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டு காலத்திற்கு மட்டும் ஒவ்வொரு வருட முடிவடையும் போது 5% குத்தகை தொகை உயர்வுடன் |
| 7 | முத்துக்குமாரசாமி பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி அமைத்திட உரிமம் | 50,000/- | 50,000/- | மின் வைப்புத் தொகை 25000/- மற்றும் வருமான வரி 2% மற்றும் சரக்கு மற்றும் சேவை கட்டணவரி 18% | ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டு காலத்திற்கு மட்டும் ஒவ்வொரு வருட முடிவடையும் போது 5% குத்தகை தொகை உயர்வுடன் |

மேற்கண்ட உரிம இனங்களுக்கு https://www.mstcecommerce.com மின்னணு இணைய தளத்தில் **24.09.2026**ம் தேதியன்று நடைபெற்ற online ஏலத்தில் கலந்து கொண்டு அதிகபட்சம் ஏலம்கோரிய நபர்களின் விபரம் MSTC Portal சென்னை அவர்களின் அலுவலகத்திலிருந்து மின்னஞ்சல் வாயிலாக கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| Lot No. | Lot Name | Quantity | Status | Buyer | Rate |
|---|---|---|---|---|---|
| 1 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.1 | 12.00 Per Month | STA | mstc/deepak s/703561 | 37000 |
| 2 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.2 | 12.00 Per Month | STA | mstc/S Mathivanan /704352 | 25100 |
| 3 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.3 | 12.00 Per Month | STA | mstc/S Mathivanan /704352 | 30100 |
| 4 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.4 | 12.00 Per Month | STA | mstc/HARISH B/707841 | 29600 |
| 5 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.5 | 12.00 Per Month | STA | mstc/R CHANDRASEKAR/707771 | 31000 |
| 6 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.6 | 12.00 Per Month | STA | mstc/ARUNKUMAR ANBU/706236 | 33000 |
| 7 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.7 | 12.00 Per Month | STA | mstc/ARUNKUMAR ANBU/706236 | 23000 |
| 8 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.8 | 12.00 Per Month | STA | mstc/ASHOKKUMAAR/705858 | 27600 |
| 9 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.9 | 12.00 Per Month | STA | mstc/Santhiya P/708844 | 27300 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.10 | 12.00 Per Month | STA | mstc/K NALLUSAMY /707208 | 20100 |
| 11 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.11 | 12.00 Per Month | STA | mstc/R CHANDRASEKAR/707771 | 22000 |
| 12 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.12 | 12.00 Per Month | STA | mstc/R CHANDRASEKAR/707771 | 30000 |
| 13 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.13 | 12.00 Per Month | STA | mstc/SARANYA A/708806 | 30000 |
| 14 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.14 | 12.00 Per Month | STA | mstc/Aarthi s/708186 | 30100 |
| 15 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.15 | 12.00 Per Month | STA | mstc/SARAVANAN PERUMAL/707350 | 27100 |
| 16 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.16 | 12.00 Per Month | STA | mstc/MARIMUTHU KANAGARAJ/709235 | 22000 |
| 17 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.17 | 12.00 Per Month | STA | mstc/MARIMUTHU KANAGARAJ/709235 | 28300 |
| 18 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.18 | 12.00 Per Month | STA | mstc/R CHANDRASEKAR/707771 | 26300 |
| 19 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.19 | 12.00 Per Month | STA | mstc/UDHAYASANKAR K/709123 | 24600 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.20 | 12.00 Per Month | STA | mstc/ARUNKUMAR ANBU/706236 | 256100 |
| 21 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.21 | 12.00 Per Month | STA | mstc/SAMSATH L/704794 | 30000 |
| 22 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.22 | 12.00 Per Month | STA | mstc/R SATHAIYA/707165 | 28000 |
| 23 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.23 | 12.00 Per Month | STA | mstc/BHARATH A/707188 | 27000 |
| 24 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.24 | 12.00 Per Month | STA | mstc/HEMALATHA A/707312 | 42500 |
| 25 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.25 | 12.00 Per Month | STA | mstc/MARIAMAMAL ALAGARSAMY/707197 | 33700 |
| 26 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.26 | 12.00 Per Month | STA | mstc/ASHOKKUMAAR/705858 | 22400 |
| 27 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.27 | 12.00 Per Month | STA | mstc/ARUNKUMAR ANBU/706236 | 20000 |
| 28 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.28 | 12.00 Per Month | STA | mstc/SAKTHIVEL B/704530 | 25500 |
| 29 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.29 | 12.00 Per Month | STA | mstc/Gangatharan TK /708454 | 21100 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.30 | 12.00 Per Month | STA | mstc/UDHAYASANKAR K/709123 | 26000 |
| 31 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.31 | 12.00 Per Month | STA | mstc/THAMARAISELVI YUVARAJ/707186 | 24800 |
| 32 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.32 | 12.00 Per Month | STA | mstc/TAMILSELVI KESAVAN/708986 | 20300 |
| 33 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.33 | 12.00 Per Month | STA | mstc/SELVAMANI R/708996 | 22100 |
| 34 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.34 | 12.00 Per Month | STA | mstc/SMITHA M S/704745 | 22000 |
| 35 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.35 | 12.00 Per Month | STA | mstc/ARULJOTHI PRISKILLA P A/704075 | 22500 |
| 36 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.36 | 12.00 Per Month | STA | mstc/SEETHALAKSHMI S/708728 | 31000 |
| 37 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.37 | 12.00 Per Month | STA | mstc/SEETHALAKSHMI S/708728 | 31000 |
| 38 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.38 | 12.00 Per Month | STA | mstc/SELVARANI V/704090 | 20000 |
| 39 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.39 | 12.00 Per Month | STA | mstc/PRIYA MARISAMY/706146 | 19500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.40 | 12.00 Per Month | STA | mstc/Victor Prince Francis/708930 | 20700 |
| 41 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.41 | 12.00 Per Month | STA | mstc/S SURESH/706867 | 20000 |
| 42 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.42 | 12.00 Per Month | STA | mstc/Shyam kumar P/708915 | 21200 |
| 43 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.43 | 12.00 Per Month | STA | mstc/ShreeMonisha Jothi krishnan/706317 | 18900 |
| 44 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.44 | 12.00 Per Month | STA | mstc/R CHANDRASEKAR/707771 | 19000 |
| 45 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.45 | 12.00 Per Month | STA | mstc/Arunprasad T/707612 | 16900 |
| 46 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.46 | 12.00 Per Month | STA | mstc/SOUNDHARYA L/706071 | 16500 |
| 47 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.47 | 12.00 Per Month | STA | mstc/KARUPUSAMY K/708680 | 14700 |
| 48 | Muthukumarasamy old bus stand South side new construction Shop No.48 | 12.00 Per Month | STA | mstc/SIVASAKTHIVEL D/704949 | 9100 |
| 49 | Flower Hawkers lease in Muthukumarasamy old bus stand | 12.00 Per Month | STA | mstc/R CHANDRASEKAR /707771 | 800000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 50 | Advertisement board(LED Lamp) installation lease in Muthukumarasamy old bus stand | 12.00 Per Month | STA | mstc/KAVERI PALANISAMY/707782 | 300000 |
| 51 | Weighing machine lease in Muthukumarasamy old bus stand | 12.00 Per Month | - | - | 0 |
| 52 | Television box installation lease in Muthukumarasamy old bus stand | 12.00 Per Month | - | - | 0 |
| 53 | KMNT Scheme new construction vegetable market shops Maligai shops | 1.00 LOT | - | - | 0 |

**அலுவலகக் குறிப்பு**

1)மேற்கண்ட பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள 48 கடைகளுக்கு பொதுபணித் துறையினரால் நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை ரூ.8,000/– யை விட அதிகபட்ச வாடகைக்கு கடை எண்.1 முதல் 19 மற்றும் 21 முதல் 48 வரையுள்ள கடைகள் e-auction ஏலக் கேள்வி அரசாங்க மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக உள்ளதால் ஏலக் கோரியவர்களுக்கு உரிமம் வழங்க மாமன்றம் முடிவு செய்யலாம்.

2)மேற்கண்ட e-auction ஏலத்தில் கலந்து கொண்டு பேருந்து நிலையத்தில் கடை எண்.20யை ரூ.25,700/– என கோருவதற்கு பதிலாக ரூ.256100/– என தவறுதலாக கோரியதால் தனது ஏலக் கேள்வியை ரத்து செய்யுமாறு திரு.ஏ.அருண்குமார் என்பவர் 24.09.2026ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

3) மேற்கண்ட e-auction ஏலத்தில் Lot No.49 முதல் Lot No.52 வரை ஒரு வருட உரிமத் தொகை என்பதற்கு பதிலாக மாத வாடகை அடிப்படையில் என தவறுதலாக MSTC Portaயில் வரப்பெற்றதாலும், Lot No.53 காமராஜ் தினசரி மார்க்கெட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு எவரும் ஏலம் கோராததாலும், மேற்கண்ட Lot No.49 முதல் Lot No.53 வரையுள்ள உரிம இனங்களை https://www.mstcecommerce.com மின்னணு இணைய தளத்தில் மறுஏலம் விட மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(3315/2025/அ6)**

**தீர்மான எண்.3361**

i) இப்பொருள் குறிப்பிட்டுள்ள கடை எண்.1 முதல் 19 மற்றும் 21 முதல் 48 வரை உள்ள கடைகள் e-auction ஏலக் கேள்வி அரசாங்க மதிப்பை கட்டிலும் கூடுதலாக உள்ளதால் ஏலம் கோரியவர்களுக்கு உரிமம் வழங்க இம்மான்றத்தால் தீர்மானிக்கப்பட்டது.

ii)கடை எண்.20 ஏலக் கேள்வி ரூ.25700/– எனக்கோருவதற்கு பதிலாக ரூ.256100/– எனக்கோரியதால் மறு ஏலம் விட இம்மான்றம் தீர்மானிக்கப்பட்டது.

iii)காமராஜர் தினசரி மார்கெட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடை எண்.49 முதல் 53 வரை மறு ஏலம் விட இம்மாமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டது.

12)கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான முத்துக்குமாரசாமி பழைய பேருந்து நிலைய வளாகத்தின் தென்புறம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகள் 1 முதல் 48 வரை (5 சதவீதம் மாற்றுத்

திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகள் 01 மற்றும் 48), காமராஜ் சந்தையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தில் புதிதாக கட்டப்பட்ட காய்கறி அங்காடிகள் மொத்தம் 136 மற்றும் மளிகை கடைகள் மொத்தம் 26, முத்துக்குமாரசாமி பேருந்து நிலையத்தில் கையில் தட்டேந்தி பூக்கள் விற்பனை செய்யும் உரிமம், முத்துக்குமாரசாமி பேருந்து நிலையத்தில் விளம்பர பலகைகள் (LED Lamp) அமைக்கும் உரிமம், முத்துக்குமாரசாமி பேருந்து நிலைய பிளாட் பாரத்தில் எடை மிஷின் வைத்திட உரிமம் மற்றும் முத்துக்குமாரசாமி பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி அமைத்திட உரிமம் ஆகிய இனங்களுக்கு https://www.mstcecommerce.com மின்னணு இணைய தளத்தின் வழியாக 24.09.2026ம் தேதி காலை 11.00 மணி முதல் 4.30 மணி வரை e-auction-ல் ஏலம் நடைபெற உள்ள விபரத்தினை பொதுமக்கள் அறியும் வண்ணம் தினமணி நாளிதழ் மூலம் 02.09.2026ம் தேதி விளம்பரம் செய்ததற்கான விளம்பரக் கட்டணம் ரூ.20,916/-ஐ Express Publications (Madurai) Private Limited அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்

2)மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(3315/2025/அ6)**

**தீர்மான எண்.3362**

**13)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட காவல் நிலையங்களான கரூர் டவுன், பசுபதிபாளையம், தாந்தோணிமலை, வெள்ளியணை மற்றும் வெங்கமேடு ஆகிய காவல் நிலையங்களில் உரிமம் கோரப்படாத 118 வாகனங்கள் வழக்கு பதிவு செய்யப்பட்ட வாகனங்களை தற்பொழுது பொது ஏலமிடுவது குறித்த விபரத்தினை பொதுமக்கள் அறியும் வண்ணம் தினதந்தி நாளிதழ் மூலம் 02.09.2026ம் தேதி விளம்பரம் செய்ததற்கான விளம்பரக் கட்டணம் ரூ.8,442/-ஐ The Daily Thanthi, Trichy அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/5402/2026)**

**தீர்மான எண்.3363 அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

**14)**கரூர் மாநகராட்சி மண்டலம்-1, 2, 3 மற்றும் 4 மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 48 வரை உள்ள பகுதிகளில் பொதுமக்களின் குறைகளை மாநகராட்சி மைய அலுவலகம் கட்டுப்பாட்டு மையத்தில் இயங்கிவரும் 24 X 7 Toll – free மையத்திற்கு வரும் புகார்களை செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான பொதுமக்கள் குறைதீர் மேலாண்மை போர்டல் மற்றும் வாட்ஸ்அப் செயலியை தனியார் நிறுவனம் மூலம் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் பணிக்கு ரூ.10.38/- இலட்சம், ஆறு மாதத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்ள ரூ.4.95/- இலட்சம், ஆறு மாத காலத்திற்கு Cloud Server-க்கான தொகை ரூ.1.18/- இலட்சம் மற்றும் இதர செலவினத் தொகை ரூ.0.29/- மொத்தம் ரூ.16,80,000/- இலட்சத்தில் பணிகளை மேற்கொள்ள 07.08.2026 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.16.80 இலட்சம்</u>**

1. M/s. M7 Corporation, Chennai
2. M/s. AI Security Services and AI facility Services, Chennai
3. M/s. Toshani Techologies Pvt. Ltd., Guwahati

மேற்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண்.2ல் உள்ள M/s. AI Security Services and AI facility Services, Chennai ஒப்பந்ததாரர் அதிகப்படியான தொழில்நுட்ப தகுதிகளில் (வ.எண்.2,3,4,5 மற்றும் 6) தகுதி பெறததால் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டது. மேலும், மீதமுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட கூடுதல் ஆவணங்கள் (Additional Documents) E-Tender Website–ல் 10.09.2026 ஆம் தேதியன்று சமர்ப்பிக்க கோரி தெரிவிக்கப்பட்டது.

1. **<u>M/s. M7 Corporation, Chennai :</u>**
   - Whether proof for having an annual minimum financial turnover of not less than 100% of the value put to tender in a financial year in the past "Theree" years (2023-2024 to 2025-2026) not enclosed.
2. **<u>M/s. Toshani Techologies Pvt . Ltd., Guwahati :</u>**
   - Satisfactorily completed the software AI work of not less 50% of the value put to the tender under single agreement in any one of the past three years must completed (2023-2024 to 2025-2026) for government department not enclosed.

மேற்படி கூடுதல் ஆவணங்கள் சமர்ப்பிக்க கோரப்பட்டதில் வரிசை எண்.1 உள்ள M/s. M7 Corporation, Chennai ஒப்பந்ததாரர் தேவையான கூடுதல் ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார். மேலும், வரிசை எண்.2ல் உள்ள ஒப்பதந்ததாரர்கள் M/s. Toshani Techologies Pvt. Ltd., Guwahati அவர்கள் single agreement of past three years (2023-2024 to 2025-2026) for government department தொடர்பான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டது.

மேற்படி பணிக்கு 21.09.2026 ஆம் தேதியன்று Price Bid திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைவிகிதம் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.16.80 லட்சம்</u>

1. M/s. M7 Corporation, Chennai -0.00% மதிப்பீட்டு விகிதம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள ஒரு ஒப்பந்தப்புள்ளியினை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. M7 Corporation, Chennai என்பவர் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளார். மேலும் இவரது ஒப்பந்தப்புள்ளியின் விலை விபரத்தினை குறைத்து தரக் கோரி (Notification) இவ்வலுவலக கடித ந.க.எண்.இ1/2946/2026, நாள்.24.09.2026 மூலம் கோரியதில் ஒப்பந்ததாரர் –4.95% சதவீதம் விலை குறைத்து வழங்கியுள்ளார்.
2. மேற்படி பணிக்கு ஒப்பந்த விலை விகிதத்தினை விட –4.95% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. M7 Corporation, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மான்றம் அனுமதிக்கலாம். **(இ1/ 2946/2026)**

**தீர்மான எண்.3364 அலுவலககுறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது**

15) திரு.பொ.பழனிச்சாமி, 47வது மாமன்ற உறுப்பினர் அவர்கள்முன்மொழிவதாக உள்ள தீர்மானம் கரூர் மாநகராட்சி மண்டலம்–4, வார்டு எண்.47, பழைய சுக்காலியூர் பகுதியில் மழைநீர் வடிகால்

கட்டி மாநகராட்சி வசம் ஒப்படைத்துக்கொள்ள அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர் எனவே சுக்காலியூர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டி மாநகராட்சி வசம் ஒப்படைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.3365** திரு.பொ.பழனிச்சாமி, 47 வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.ரா.வேலுச்சாமி 48து மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மேயர்**
**கரூர் மாநகராட்சி**